27.10.2025

அ.வ.எண். 58/2022

வா.சா.1 - அவிநாசியப்ப கவுண்டர், த/பெ. மாரப்ப கவுண்டர்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 25.10.2025 is accordance with the provision of Act X of 3331

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கருமத்தம்பட்டி கிராம புல எண்.713/2 ல் உள்ள சொத்தை கிரயம்பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு, புல எண்.713/2E மற்றும் வேறு சர் வே எண்களில் சொத்து உள்ளது என்றால் சரிதான். கணபதியப்ப கவுண்டரும், அவரது அண்ணன் மாரப்பன், வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி கணபதியப்ப கவுண்டருக்கு புல எண்.713/2E ல் 39 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். கணபதியப்ப கவுண்டர் தான் அப்போதிலிருந்து அனுபவ பாத்தியத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

2. எனக்கு 70 ¾ சென்ட் சொத்து தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனது சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் தெரியவில்லை. புல எண்.713 ல் மொத்தமாக சொத்து காட்டப்பட்டுள்ளது என்றும் யாருடைய சொத்து எங்குள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரதிவாதி எனது சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லியுள்ளதை அதை நிரூபிக்க நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய வேண்டி மனுத்தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. பிரதிவாதி உண்மையில் நான் சொத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அதை நீதிமன்ற ஆணையர் மூலமாக நிரூபித்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் பிரதிவாதிகள் புல எண்.713/2E ல் 39 சென்ட் பாத்தியம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்னுடைய நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், நான் பொய்யாக வழக்கு தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

| |
|---|
| Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct<br><br>Sd./M.Santhosham<br>District Munsif, Sulur |